சங்கமித்திரை

வேங்கடலக்ஷ்மி

பதிவு]

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை

[விலை அணா.12

இரண்டாம் பதிப்பு : 1949.

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS
MYLAPORE MADRAS

T. 3132

குறிப்பு

தமிழ் நாட்டுப் பெண்மணிகளில் எழுத்தாளர்கள் பலர் உண்டு. முக்கிய மாகச் சிறுகதை ஆசிரியர்கள் சிலரைத் தமிழுலகம் நன்கு அறியும். ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி அவர்கள் நெடுங்கால மாகச் சிறுகதைகள் எழுதி வருகிறார்கள். இவருடைய சிறுகதைத் தொகுதி புத்தக மாக வெளியாகி யிருக்கிறது.

இவருடைய நடை அழகியது; தெளி வானது.

'சங்கமித்திரை' என்ற இச் சிறு நாடகம் அந்த நடைக்கு உதாரணமாக விளங்குகிறது.

T. 3132

பாத்திரங்கள்

சங்கமித்திரை	...	அசோகரின் மகள்; கதாநாயகி; இளவரசி.
சங்கமாலை	...	அவள் தோழி.
வித்தியாதேவி	...	நந்திதேவர் மகள்; அதிரூபன் மனைவி.
அசேகவர்த்தனர்	...	மௌரிய சக்கரவர்த்தி; சங்கமித்திரையின் தந்தை.
நந்திதேவர்	...	சம்ஸ்தானப் புலவர்; வித்தியாதேவியின் தந்தை.
மகேர்திரகுப்தன்	...	அசோகரின் மகன்; இளவரசன்.
ராதாகுப்தர்	...	அசோகரின் மந்திரி.
ஞானகோஷர்	...	பௌத்த பிக்ஷு.
உடகுப்தன்	...	இலங்கை அரசன்.
அதிரூபன	...	கலிங்கத்துச் சேனாதிபதி; வித்தியா தேவியின் கணவன்.

[மற்றும் நகாவாசிகள், ஏழைகள், சேவகர்கள், தோழிகள் முதலியோர். கதை நிகழும் இடம்: பாடலிபுரத்திலும் சம்ப நதிக்கரையிலும்.]

காட்சி 1

இரவு

[வித்தியாதேவி உறங்குகிருள். அதிரூபன் கைகளை மார்பின் மீது கட்டியவண்ணம் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண் டிருக்கிருன். அவனுடைய முகம் கவலையின் சின்னத்தைக் காட்டுகிறது.]

அதிரூபன்: ஹும்; என்ன எதிர்பாராத செய்தி இது? வித்தியாவிடம் இதை வெளியிடுவது எப்படி? பூர்ண கர்ப்பிணியாக இருக்கும் அவளை இந்நிலையில் நான் விட்டுச் செல்லப் போகிறேன் என்று அறிந்தால் அதுவே அவளைக் கொன்றுவிடுமே! ஐயோ, தேவா! இதென்ன சோதனை?

[மஞ்சத்தண்டை சென்று உறங்கும் மனைவியின் முகத்தை நோக்குகிருன். அவளை எழுப்ப மனம் துணியாமல் மீண்டும் உலாவ ஆரம்பிக்கிருன்.]

நேரமாகிறதே! இனியும் எப்படிக் காலதாமதம் செய்வது? உதயமாவதற்கு முன்பே நான் படைகளுடன் அணிவகுத்துக் கோட்டைக்கு வெளியே தயாராக இருக்க வேண்டும் என்று அரசரின் உத்தரவு வந்திருக்கிறதே. வித்தியா!

[மஞ்சத்தண்டை சென்று அவளைத் தட்டி எழுப்புகிருன்.]

வித்தியா! என் கண்மணி! எழுந்திரு.

T. 3132

[அவள் கண்ணைத் திறந்து பார்க்கிறாள். அவள் முகத்தில் ஒரு புன்னகை. மீண்டும் கண்களை மூடிக் கொண்டு புரண்டு படுக்கிறாள்.]

வித்தியா! கண்ணே! எழுந்திரு.

[வித்தியாதேவி மீண்டும் கண்களைத் திறக்கிறாள்; அதிரூபன் அவள் கரத்தைப்பற்றி எழுப்பி உட்கார வைக்கிறான். பிறகு அவள் அருகில் தானும் உட்கார்ந்துகொள்ளுகிறான்.]

வித்தியா! இதோ பார்! உன்னிடம் ஒரு முக்கியமான சமாசாரம் கூற வேண்டும்.

வித்தியா: (பயத்துடன்) என்ன இது? இவ்வளவு அதிகாலையில் என்னை எழுப்பிக் கூறும்படியாக என்ன அவ்வளவு முக்கியமான சமாசாரம்? சீக்கிரம் கூறுங்கள். பயமாயிருக்கிறதே எனக்கு!

அதிரூபன்: கண்ணே! ஏன் உன் உடல் இப்படி நடுங்குகிறது? வித்தியா, நீ மனத்தைத் தைரியப்படுத்திக் கொள்ள வேண்டும். கண்மணி! அசோக சக்கரவர்த்தியின் படைகள் மகாநதிக் கரையில் முகாம்போட்டிருக்கின்றனவாம்.

வித்தியா: (நடுக்கத்துடன்) ஐயோ! அப்படியானால், நீங்கள் . . .

அதிரூபன்: ஆம். கண்மணி! நான் இப்போதே நம் கலிங்கதேசத்துப் படைகளுடன் யுத்த சன்னத்தனாக எதிர்ப்புக்குத் தயாராக இருக்க வேண்டுமென்று நம் அரசரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. வித்தியா, வருத்தப்படாதே! போர்வீரனின் தொழிலே இதுவன்றோ?

வித்தியா: ஐயோ, நாதா! அப்படியானல் தாங்கள் இப்போதே போக வேண்டுமோ?

அதிரூபன்: ஆம், கண்மணி! உதயமாவதற்குள் நம் படைகளுக்குத் தலைமை வகித்துக் கோட்டைக்கு வெளியே அணிவகுத்து நிற்க வேண்டும் என்பது அரசரின் உத்தரவு. நான் இப்போதே போக வேண்டும். எனக்குத் தைரியமாக விடைகொடு.

வித்தியா: நாதா, என்னைத் தனியாகவா விட்டுச் செல்கிறீர்கள்? ஐயோ! இந்நிலையில் நான் எப்படி இங்கே தனியாகக் காலம் கழிப்பேன்?

[முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுகிருள்.]

அதிரூபன்: கண்ணே, இதென்ன கோழைத்தனம்? கலிங்கத்தரசனை காமரூபரின் பிரதம சேனதிபதி அதிரூபன் மனைவியன்றோ நீ! வித்தியா, எங்கே, என்னைப் பார். மகா தைரியசாலியான நீகூட இப்படி மனம் கலங்கலாமா?

வித்தியா: நாதா, எவ்வளவோ முறை தாங்கள் மகா பயங்கரமான யுத்தங்களுக்குச் சென்று வெற்றிமாலை சூடித் திரும்பி வந்திருக்கிறீர்கள். அப்போதெல்லாம் நான் சிறிதும் கலங்காத கற்பாறைபோன்ற நெஞ்சத்துடன் தங்களுக்கு விடைகொடுத்து அனுப்பியிருக்கிறேன். ஆயின், இப்போது மட்டும் என் நெஞ்சம் ஏனோ கலங்குகிறது?

[கண்ணீர் விடுகிருள்.]

அதிரூபன்: (எழுந்து) கண்ணே, வீணில் மனம் கலங்காதே. நான் சென்று கவசம் அணிந்து வருகிறேன். அதோ பார்! கிழக்கு வெளுக்க ஆரம்பித்துவிட்டது.

[மெல்ல வெளியே போய்ச் சற்று கோத்துக்கெல்லாம் முழுக் கவசம் அணிந்து போர்க்கோலத்துடன் திரும்பி வருகிருன். தூரத்தில் தாரை, தப்பட்டை, கொம்பு முதலியவைகள் முழங்குகின்றன.]

அதிரூபன்: (பரபரப்புடன்) கண்மணி, அதோ பார்! படைகள் அணிவகுத்துவிட்டன என்பது தெரிகிறது. எனக்கு விடைகொடு.

வித்தியா: நாதா, சுகமே போய் வாருங்கள். ஈசன் அருள் உங்களைக் காக்கட்டும்!

[கண்களைத் துடைத்துக்கொண்டு அவன் மார்பின்மீது சாய்கிருள்.]

அதிரூபன்: வித்தியா, நான் போய்வருகிறேன்.

[துரிதமாக வெளியே போய்விடுகிருன். வித்தியா தேவி சாளரத்தில் போய் நின்று அவன் குதிரைமீது ஏறிச் செல்வதைக் கண்ணீருடன் பார்த்துக்கொண்டு நிற்கிருள். அவனுடைய உருவம் கண்ணுக்கு மறைந்தவுடன் மஞ்சத்தின் மீது குப்புறப் படுத்துக்கொண்டு நெஞ்சு விரியும் துயருடன் அழுகிருள்.]

காட்சி 2

அந்திவேளை

[பாடலிபுரத்தில் சக்கரவர்த்தி அசோகவர்த்தனரின் அரண்மனை. சக்கரவர்த்தியின் ஏகாந்த விடுதி. பொன்னும் வெள்ளியும், போகப் பொருள்களும் பட்டாடைகளும், அவ்விடுதியின் நாலுபுறமும் குவிக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளித் தீபங்கள் எரிகின்றன. சக்கரவர்த்தி சிந்தாகுலராய் உலாவிக்கொண்டிருக்கிறார். உள்ளே நுழைந்து வணங்குகிறான் ஒரு பணிமகன்.]

சக்கரவர்த்தி: எங்கே? ...சங்கமித்திரை இன்னும் வரவில்லையா?

பணிமகன்: ஆம், சக்கரவர்த்தி, இளவரசி இப்போது வருவதாகக் கூறினார்கள்.

சக்கரவர்த்தி: சரிதான், நீ போ.

[அவன் வணங்கிப் போகிறான்.]

சக்கரவர்த்தி: என்ன ஆச்சரியம்! சங்கமித்திரையும் மகேந்திரனும் என் இரு கண்மணிகள். இவ்வாறு இவ்வுலக பந்தங்களையெல்லாம் அடியோடு விலக்கி, விருப்பு வெறுப்பற்று, முற்றும் துறந்த முழு ஞானியர் போன்று உலகவாழ்வை நடத்துகிறார்கள்! என்ன என்ன விதமாகவோ அவர்களை இவ்வுலக மார்க்கத்தில் திருப்ப யத்தனித்தும் ஒன்றும் பயன் பெறவில்லையே? மகேந்திரனைக் காட்டிலும் சங்கமித்திரையின் போக்கு என்னை மிகவும் திகிலுறச் செய்கிறது. பதினெட்டு வயதும் நிரம்

Acc. 16229
T-3132

பாத பச்சிளம் பாலிகை அவள்! பழுத்த ஞானியைப் போன்றல்லவா என்னிடம் அறமார்க்கத்தைக் குறித்துச் சம்பாஷிக்கிறாள்? ஆ! அதோ வருகிறாள். கலிங்கத்திலிருந்து கொண்டுவந்திருக்கும் இப்பொருள்களையெல்லாம் அவள் காண வேண்டும் என்றே இங்கே பரப்பச் செய்தேன். இவற்றில் எதையாகிலும் விரும்பிக் கேட்கிறாளா, பார்ப்போம்?

[சங்கமித்திரை வருகிறாள்.]

சங்கமித்திரை: தந்தையே, நமஸ்கரிக்கின்றேன்.

[வணங்கி எழுகிறாள்.]

சக்கரவர்த்தி: குழந்தாய்! உனக்குச் சர்வமங்களமும் உண்டாகட்டும். வா, இப்படி உட்கார்!

[சங்கமித்திரை சக்கரவர்த்தியருகில் உட்காருகிறாள்.]

சக்கர: (அவள் தலையைக் கோதிக்கொண்டே) குழந்தாய், மௌரிய சாம்ராஜ்யத்தின் இளவரசியான உனக்குப் பட்டாடைகளுக்கும் பூஷணங்களுக்கும் பஞ்சமாய்ப் போய்விட்டதா? என்னுடைய பிரஜைகளில் மிகச் சாதாரணமான ஓர் ஏழைச் சிறுமிகூட, நீ அணிந்திருக்கும் இவ்வாடையை அணிய வெட்கம் உறுவாளே! இதென்ன கோலம்? குழந்தாய், உன்னை இவ்வாறு காணும் போது என் மனம் மிகவும் சங்கடப்படுகிறது.

சங்க: (புன்சிரிப்புடன்) தந்தையே, சகலமும் கற்றறிந்த மேதாவியான தாங்களே இவ்வாறு பேசுவது எனக்கு வியப்பை அளிக்கிறது. கடவுளின் முன்னிலையில் இளவரசி என்ன, ஏழை என்ன? எல்லோரும் ஒன்றுதான். பட்டுப்பட்டாடைகளும் பூஷணங்களும் அணிந்து கொள்வதால் நான் கடவுளின் முன்னிலையில் சிலாக்கிய

மாகக் கருதப்படுவேனு? இல்லையே. அன்பும் அருளும் தர்மமுமே என்னை ஈசனுக்குச் சமீபமாக இழுத்துச் செல்லும். இது தங்களுக்குத் தெரியாததல்லவே!

சக்கர: சங்கமித்திரை, நீ இவ்வாறு முற்றும் துறந்துவிட்ட முழு ஞானியைப்போலப் பேசுவதும் வாழ்க்கை நடத்துவதும் எனக்கு அளவில்லாத வருத்தத்தை அளிக்கின்றன. உன் அன்னை இறந்தபோது உன்னையும் மகேந்திரனையும் என் கண்மணிகளைப்போல் காத்து உங்கள் இருவருக்கும் தகுந்த இடத்தில் விவாகமும் முடித்து வைப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேனே. நீங்கள் இருவரும் இவ்வாறு துறவிகளைப்போல் இருந்தால் என்னுடைய வம்சம் என்ன ஆவது? இந்த மௌரிய வம்சம் உன்னாலும் உன் சகோதரனாலும் அன்றோ விருத்தியடைய வேண்டும். உம், அதிருக்கட்டும்; இதோ, கலிங்கத்திலிருந்து நான் கொண்டுவந்திருக்கும் இவ்வற்புதமான பொருள்களையெல்லாம் பார்த்தாயா? இதோ பார், என்ன நேர்த்தியான பட்டாடைகள்! அணிகலன்கள்! என்ன அழகான வேலைப்பாடமைந்த தந்தச் சாமான்கள்! குழந்தாய், ஏன் பேசாமல் இருக்கிறாய்? இவற்றில் ஒன்றாவது உன் மனத்தைக் கவரவில்லையா?

[சங்கமித்திரை எழுந்து தூர நின்றபடியே அவற்றையெல்லாம் நோக்குகிறாள். அவள் முகத்தில் அளவற்ற துக்கமும் வெறுப்பும் தோன்றுகின்றன.]

சங்க: தந்தையே, நம்மிடந்தான் ஏராளமான பொன்னும் மணியும் குவிந்து கிடக்கின்றனவே! இன்னும் இவையெல்லாம் எதற்காக?

சக்கர: **(புன்னகையுடன்)** குழந்தாய், இதென்ன கேள்வி? யுத்த தர்மப் பிரகாரம் ஜயித்தவர் தோற்ற

வரிடமிருந்து பொன்னும் மணியும் பூஷணங்களும் கப்பமாகப் பெறுவது வழக்கமன்றோ? கலிங்கநாட்டை நான் ஜயித்துத் திரும்பியபோது கலிங்கத்தரசன் காமரூபன் இவற்றையெல்லாம் எனக்குக் கொடுத்தான். பெற்று வந்தேன்.

சங்க: தந்தையே, யுத்த தர்மம் என்று கூறுகிறீர்களே! யுத்தமே அதர்மமாக இருக்கும்போது அதில் தர்மம் எங்கிருந்து வரும்? ஒருவருக்குரிய நாட்டை இன்னொருவர் மிருக பலத்தால் பலாத்காரமாகப் பெறும்போது அதில் தர்மத்துக்கும், நியாயத்துக்கும், அருளுக்கும் அன்புக்கும் இடம் எங்கே?

சக்கர: குழந்தாய், இவ்விதமான கேள்விகளுக்கெல்லாம் என்ன பதில் கூறுவது? யுத்தமே அரசருக்கு உரிய தர்மம் அல்லவா?

சங்க: தந்தையே, அதை விட்டுவிடுங்கள். நான் இன்னொன்று கேட்கிறேன். அதற்குமட்டும் பதில் அளியுங்கள்.

சக்கர: (புன்சிரிப்புடன்) கேள், குழந்தாய்!

சங்க: (கண்ணீருடன்) தந்தையே, இதோ இவ் விடுதியில் குவிந்து கிடக்கும் இப்பொருள்களையெல்லாம் கலிங்கத்தரசன் காமரூபன் தங்களுக்குக் கப்பமாகக் கொடுத்ததாகக் கூறுகிறீர்கள். அவன் இவற்றையெல்லாம் தங்களுக்கு எதற்காகக் கொடுத்தான்? தங்கள் பேரில் அவன் கொண்ட அன்பினாலா? அல்லவே? தாங்கள் மேலும் மேலும் அவனைத் துன்புறுத்தாமல் இருப்பதற்காகவே இவற்றையெல்லாம் தங்களுக்குக் கொடுத்தான் அல்லவா? ஐயோ, தந்தையே! எவ்வளவு ஏழைகளின்

ரத்தத்தில் இப்பொருள்கள் தோய்க்கப்பட்டு வந்தனவோ! ஐயோ! இவற்றைக் காணவும் என் கண்கள் கூசுகின்றனவே! தந்தையே, தந்தையே! என்ன காரியம் செய்தீர்கள்? கலிங்க யுத்தத்தில் எவ்வளவு ஆயிரக்கணக்கான உயிர்கள் மாண்டன? தம்மால் அவ்வுயிர்களில் ஒன்றையேனும் மீட்டுக்கொடுக்க முடியுமா? தம்மால் கொடுக்க முடியாத உயிரைக் கொல்லுதல்மட்டும் நியாயமா? ஈசன் சந்நிதியில் இவ்வாயிரக்கணக்கான உயிர்க்கொலைகளுக்கு என்ன பதில் கூறப் போகிறீர்கள்? தம்முடைய கோரமான நாட்டாசையினால், செல்வம் செழித்து, வளம் மிகுந்திருந்த கலிங்கநாடு இப்போது ஜீவனற்ற வெறும் பாலைவனம் ஆகிவிட்டதே! வானளாவி விளங்கிய மாடமாளிகைகள் இடிந்து தரைமட்டம் ஆகிவிட்டனவே! எவ்வளவு ஜீவன்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றித் தவிக்கின்றனவோ! ஐயோ! கலிங்கத்தரசனான காமரூபன் யுத்தத்தில் தோற்றுவிட்ட அவமானம் தாங்காமல் தற்கொலை செய்துகொண்டுவிடவே, அவன் தேவியரும் சிதையில் மரித்தனராம். இவை எல்லாவற்றையும்விட என் மனத்தை மட்டிலாத் துயருக்கு ஆளாக்குவது இன்னொரு செய்தி. தந்தையே, அதை எண்ணும்போதே என் உடல் நடுங்குகிறது; நம் அரண்மனைப் புலவர் நந்திதேவரின் மகள் வித்தியாதேவியைத் தங்களுக்கு ஞாபகம் இல்லையா? மூன்று வருஷங்களுக்கு முன்பாகக் கலிங்கநாட்டின் பிரதம சேனாதிபதி அதிரூபனைக் காதல்மணம் செய்துகொண்டாளே? என்னை அழைத்துக்கொண்டு தாங்களும் அந்தத் திருமணத்துக்கு விஜயம் செய்து அவர்களுக்குஆசி கூறி விவாகப் பரிசளித்து வந்தீர்களே. அந்தப் பேதைப் பெண் பூர்ண கர்ப்பிணியாக இருந்தனளாம். அதிரூபன்

போரில் மரித்துவிடவே வித்தியாதேவி தன் மாளிகையிலிருந்து வெளிப்பட்டு எங்கோ போய்விட்டாளாம். அவளைக் குறித்து ஒன்றுமே தெரியவில்லையாம். நந்திதேவர் என்னிடம் சொல்லிப் பரிதபித்தார். அவருடைய துயரம் காணச் சகிக்கவில்லை. அப்பெண் இந்நிலையில் எங்கே அலைகிறாளோ? என்ன செய்கிறாளோ? ஒன்றும் தெரியாது. தந்தையே, அப்பெண்ணின் கதியை யோசித்துப் பாருங்கள். இதற்கெல்லாம் யார் காரணம்? ஐயோ, தேவா! என்ன மகத்தான பாபங்கள்! தந்தையே! தந்தையே!

[விம்மி விம்மி அழுகிறாள். சக்கரவர்த்தி அளவற்ற குழப்பத்துடன் அவள் அருகில் சென்று நிற்கிறார்.]

சக்கர: குழந்தாய்! (குரல் தழுதழுக்கிறது) குழந்தாய்!

சங்க: தந்தையே, நான் போய்வருகிறேன். என் மனம் அளவில்லாத குழப்பம் அடைந்து தவிக்கிறது. என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை. இதோ, இப்பொருள்களை எல்லாம் காணும்போதே என் இருதயம் வெதும்புகிறது. இவற்றையெல்லாம், கலிங்கநாட்டு யுத்தத்துக்குப் பலியானவர்களின் சாந்திக்காக அத்தேசத்தில் உணவின்றி அலையும் ஏழைகளுக்குத் தானம் செய்யுங்கள். நான் சென்று நாளைத்தினம் வருகிறேன். தந்தையே, என்னை மன்னிக்க வேண்டும்.

[தலை குனிந்த வண்ணம் வெளியே போகிறாள். சக்கரவர்த்தி தலையைக் கைகளில் தாங்கியவண்ணம் மௌனமாக ஆசனத்தில் சாய்கிறார்.]

காட்சி 3

காலை

[அரண்மனை நந்தவனம். தாமரைத் தடாகத்தின் கரையில் உட்கார்ந்திருக்கிறாள் சங்கமித்திரை. அவள் எதிரில் கையில் பிடித்த ஏட்டுச் சுவடிகளைப் புரட்டியவண்ணம் உட்கார்ந்திருக்கிறான், இளவரசன் மகேந்திரன்.]

சங்க: அண்ணா, கலிங்கத்து வெற்றியிலிருந்து தந்தை திரும்பி வந்த பின்பு நீங்கள் அவரைப் பார்த்தீர்களா?

மகேந்: இல்லை. நான் நலந்தாவிலிருந்து முந்தா நாள் மாலையில்தான் வந்தேன். நேற்று முழுவதும் மடத்திலேயே தங்கிவிட்டேன். இன்று காலையில்தான் அரண்மனைக்கு வந்தேன். வந்தவுடன் நேராக உன்னைக் காண அந்தப்புரத்துக்குப் போனேன். நீ இங்கே இருப்பதாக உன் தோழி சங்கமாலை சொன்னாள். உடனே இங்கே வந்தேன்.

சங்க: அண்ணா, மடத்துக்காக நிர்மாணித்திருக்கும் புதுக்கட்டிடம் எப்படி இருக்கிறது? தங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?

மகேந்: சங்கமித்திரா, கட்டிடம் மிக நன்றாக இருக்கிறது! ஆனால் அதைக்காட்டிலும் அது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடந்தான் எனக்கு நிரம்பத் திருப்தியளிக்கிறது. சலசலவென்று அரித்துக்கொண்டு ஓடும் சம்பா

நதியின் குளிர்ச்சியும், நாலுபுறமும் பச்சைப் பசேலென்று விரிந்து கிடக்கும் வயல் பரப்புகளும் வெகு நேர்த்தியாக இருக்கின்றன. உம்; இதைப் பார்த்தாயா? புத்த மதத்தின் கொள்கைகளையும் தத்துவங்களையும் விளக்கி எழுதப்பட்டிருக்கும் புதிய நூல் இது. உனக்காக ஞானகோஷ பிக்ஷுவைக் கேட்டு வாங்கிவந்தேன்.

[அவளிடம் கொடுக்கிறான். சங்கமித்திரை அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொள்கிறாள்.]

சங்க: அண்ணா, இன்று இரவே படித்துவிட்டு நாளைக் காலையில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

மகேந்: ஆகட்டும்; அவசரம் ஒன்றும் இல்லை. மெதுவாகக் கொடு, போதும். நான் சென்று தந்தையைக் கண்டுவருகிறேன். மாலையில் மடத்தில் நடக்கும் உபந்நியாசத்துக்கு நீயும் வருவாய் அல்லவா?

சங்க: ஆம், அண்ணா! வரலாம் என்றுதான் இருக்கிறேன். ஞானகோஷரின் உபந்நியாசத்தைக் கேட்க வேண்டும் என்று என் தோழி சங்கமாலையும் ஆவலாக இருக்கிறாள். அவளையும் உடன் அழைத்து வரலாமென்று எண்ணியிருக்கிறேன்.

மகேந்: அப்படியானால் மாலையில் மடத்தில் சந்திக்கலாம். நான் போகிறேன்.

சங்க: போய் வாருங்கள், அண்ணா.

(மகேந்திரன் போகிறான்.)

சங்க: (எழுந்து உலாவியபடியே) ஏனோ? இன்று காலையில் எழுந்ததுமுதல் என் மனம் வெகு கலக்கம் அடைந்திருக்கிறது. எதிலும் எண்ணம் செல்லவில்லை.

மகள் என்னும் கடமையை மீறித் தந்தையிடம் ஏதாவது கூறிவிட்டேனே என்று என் நெஞ்சம் ஐயுறுகிறது. பேதையான அந்த வித்தியாதேவியின் நினைவு ஒரு புறம் வாட்டுகிறது. தேவா, தேவா! என்னைச் சோதிக்க வேண் டாம். அருளும் அன்பும் ததும்பும் அறநெறி மார்க்கத்தி லேயே நான் செல்லும்படி அருள் புரியும்.

(போகிறாள்.)

காட்சி 4

பகல்

[சக்கரவர்த்தி தமது ஏகாந்த விடுதியில் சோகத்துடன் உட்கார்ந்திருக்கிறார். எதிரே வணங்கி நிற்கிறான், மெய்காப்பாளன் ஒருவன்.]

சக்கர: அந்தப் பெண் யார் என்பதை விசாரித்தாயா? என்னை எதற்காகக் காண வேண்டும்?

மெய்: சக்கரவர்த்தி! அவள் யார் என்பதைக் கூற மாட்டேன் என்கிறாள். தங்களிடந்தான் கூறுவாளாம். ஆனால் அவளைப் பார்த்தால் நோய்க்கும் பஞ்சத்துக்கும் ஆளாகிப் பலவிதமான கஷ்டங்களை அநுபவித்திருக்கிறாள் என்பது தெரிகிறது. அத்துடன், பூர்ண கர்ப்பிணியாகவும் தோன்றுகிறது.

சக்கர: (ஆச்சரியத்துடன்) அப்படியா? அவள் யாராக இருக்கக் கூடும்? ஒருவேளை...(யோசிக்கிறார்.) உம்.... எதற்கும் உடனே அழைத்துவா, பார்ப்போம்.

(அவன் வணங்கிப் போகிறான்.)

சக்கர: ஆம்; நிச்சயமாக அந்தப் பெண் அவளாகத்தான் இருக்க வேண்டும்! ஐயோ, தேவா! நேற்றுச் சங்கமித்திரை கூறிய மொழிகள் என்னை இன்ன விதம் என்று அறியாத நிலைமையில் கலக்கியிருக்கும்போது? ஆ! அதோ வருகிறாள்.

[மெய்காப்பாளனுடன் நெடுகப் போர்வையணிந்த வித்தியாதேவி வருகிறாள். அவளை விட்டுவிட்டு

அவன் வணங்கி வெளியே போய்விடுகிறான். வித்தியாதேவி போர்வையை விலக்குகிறாள்.]

வித்தியா: சக்கரவர்த்தி! நமஸ்கரிக்கிறேன், [வணங்குகிறாள்.]

சக்கர: (திடுக்கிட்டு) ஆ! நீதானா?

வித்தியா: ஆம், நான்தான், சக்கரவர்த்தி! நந்திதேவரின் ஏழைப்பெண் வித்தியாதேவி. தங்கள் அருமைப் புதல்வி சங்கமித்திரையின் பால்ய சிநேகிதி. காலஞ்சென்ற கலிங்கதேசத்துச் சேனாதிபதி அதிரூபனின் மனைவி.

[தள்ளாடி விழப்போகிறாள்.]

சக்கர: அம்மா, உன்னைப் பார்த்தால் மிகவும் பலவீனப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதோ, இந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு நீ கூறவேண்டியதைத் தெரிவி.

[எதிரே இருக்கும் ஆசனத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.]

வித்தியா: இல்லை இல்லை; நான் நின்றுகொண்டே பேசுகிறேன்.

சக்கர: சரி; உன் இஷ்டம். என்னை எதற்காகப் பார்க்க வந்தாய்? அதைத் தெரிவி.

வித்தியா: தங்களை எதற்காகப் பார்க்க வந்தேன்? தங்களையல்லாமல் வேறு யாரைப் பார்ப்பது? என்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தது தாங்களே அல்லவா?

[சக்கரவர்த்தி பிரமித்து நிற்கிறார்.]

சக்கர: (ஆச்சரியத்துடன்) நானா உன்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தேன்? நீ பேசுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! பெண்ணே, நீ என்ன கூறுகிறாய் என்பதை நன்றாக யோசித்துவிட்டுக் கூறு.

வித்தியா: (நிதானமாக) ஆம்; நன்றாக யோசித்துப் புத்தி நிதானத்துடன்தான் கூறுகிறேன். தாங்கள் தங்களுடைய மிருகபலத்தைக் கொண்டு கலிங்கநாட்டின் மீது துராக்கிருதமாக எடுத்த படையெடுப்பே நான் இந்த நிலைமைக்கு வரக் காரணம். நான் மட்டுமா? அல்ல; என்னைப்போன்ற ஆயிரக்கணக்கான மக்களின் துயரத்துக்கும் காரணம். வீடு, வாசல், நாடு, நகரம், பந்து, மித்திரர்கள் ஆகியவர்களை இழந்து, உணவற்றுத் தவிக்கும் கலிங்கத்து மக்கள் எவ்வளவு பேர்? இதற்கெல்லாம் யார் காரணம்? தங்கள் நாடுகள் தங்களுக்குப் போதுமான திருப்தி அளிக்கவில்லையா? எவ்வளவு ரத்தம் சிந்தப்பட்டது? தங்கள் ஒருவருடைய அகம்பாவத்துக்கும் இறுமாப்புக்கும் ஆகவன்றோ இவ்வளவு உயிர்ச்சேதம்? இதோ, என்னைப் பாருங்கள்! கொஞ்ச காலத்துக்கு முன்புதான், ஒரே ஒரு பிறைக்கு முன்புதான், என் கணவனுடன் கூடி, மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். இப்போதோ? நான் ஓர் அநாதை; உணவற்று, உடையற்று, தங்க இடமற்றுத் தவிக்கும் ஓர் அநாதை! (ஆவேசத்துடன்) ஆம்; தேவா! நான் ஓர் அநாதை!......அநாதை!! என்னை ஆதரிப்போர் யாரும் இல்லை. சக்கரவர்த்தி! தாங்களே என்னுடைய இந்த நிலைமைக்குக் காரணம். ஐயோ! தேவா!

[உணர்வற்றுக் கீழே விழுகிறாள்.]

சக்கர: (பரபரப்புடன்) யார் அங்கே! சீக்கிரம்! கொஞ்சம் ஜலம் எடுத்துவா. இந்தப் பெண் மூர்ச்சையாகிவிட்டாள்!

[மெய்காப்பாளன் ஜலத்துடன் ஓடிவருகிறான்.]

காட்சி 5

பகல்

[அரண்மனையில் சங்கமித்திரையின் விடுதி. புத்த தேவரின் சிலையெதிரில் தியானத்தில் அமர்ந்திருக்கிருள் இளவரசி. தோழி சங்கமாலை மெதுவாக உள்ளே வருகிருள். சப்தம் செய்யாமல் சற்று நேரம் நிற்கிருள்.]

சங்கமாலை: தேவி! (இளவரசி கண்ணைத் திறந்து பார்க்கிருள்.)

சங்க: என்ன விசேஷம், சங்கமாலா?

சங்கமாலை: தேவி, தங்களை உடனே வருமாறு சக்கரவர்த்தி ஆள் அனுப்பியிருக்கிருர்.

சங்க: (ஆச்சரியத்துடன்) என்னையா? உடனே வருமாரு? என்ன விசேஷம்? இவ்வேளையில் ஒரு நாளும் சக்கரவர்த்தி அழைத்ததில்லையே? (எழுந்திருக்கிருள்.) சங்கமாலா, என்னைத் தந்தையார் எதற்காக அழைக்கிருர் என்பது உனக்குத் தெரியுமா?

சங்கமாலை: மெய்காப்பாளன் சொன்னுன், தேவி!

சங்க: என்ன சொன்னுன்?

சங்கமாலை: தேவி, யாரோ ஒரு பெண் சக்கரவர்த்தியைக் காண வந்தாளாம்; நெடுந்தூரத்திலிருந்து வந்திருக்கிருளாம். அத்துடன், பாவம்! பூர்ண கர்ப்பிணியாம். பேசிக்கொண்டிருக்கையிலேயே ஆயாச மிகுதியினுல் மூர்ச்சையாகிவிட்டாளாம். தாங்கள் வந்தால் அவளுக்கு

உதவியாக இருக்குமென்று சக்கரவர்த்தி தங்களுக்கு உடனே ஆள் அனுப்பினாராம்.

சங்க: (வியப்புடன்) அப்படியா? யாராக இருக்கக் கூடும், அந்தப் பெண்? சங்கமாலா, வா சீக்கிரம் .போய்ப் பார்ப்போம்.

[இருவரும் துரிதமாகச் செல்லுகிறார்கள்.]

சங்க: (போய்க்கொண்டே) சங்கமாலா, இப்போது அவள் எப்படி இருக்கிறாளாம்?

சங்கமாலை: இப்போது கொஞ்சம் குணமாக இருக்கிறதாம். சுய உணர்வு வந்து பேசுகிறாளாம்.

சங்க: ஐயோ பாவம்! வா, சீக்கிரமாக.

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி 6

காலம். இரவு

[சங்கமித்திரையின் விடுதியில் வித்தியாதேவி மஞ்சத்தில் படுத்திருக்கிறாள். சங்கமாலை அருகில் நின்று விசிறிக்கொண்டிருக்கிறாள். சங்கமித்திரை மஞ்சத்தின் அருகில் உட்கார்ந்து வித்தியாதேவியின் முகத்தைக் கவலையுடன் நோக்கிக்கொண்டே அவளுடைய நெற்றியில் கையை வைத்துக் கொண்டிருக்கிறாள். வித்தியாதேவி புரண்டு கொண்டே தன் நினைவற்றுப் புலம்புகிறாள்.]

வித்தியாதேவி: நாதா! ஐயோ! என்னை இந்த நிலைமையில் தனியாகவா விட்டுச் செல்கிறீர்கள்? ஐயோ! எனக்குப் பயமாக இருக்கிறதே!

(சங்கமித்திரையின் கண்களில் நீர் வடிகிறது.)

ஐயோ! அம்மா! எனக்கு என்னவோ செய்கிறதே! நாதா, நாதா! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்னால் நடக்க முடியவில்லையே! தாகமாக இருக்கிறதே! ஐயோ! ஜலம், கொஞ்சம் ஜலம் வேண்டும். இங்கே ஒரு சொட்டு ஜலம் இல்லையா?

(புரளுகிறாள்.)

சங்க: சங்கமாலா, நீ எதற்கும் ஓடிப்போய் நம் அரண்மனை வைத்தியரை இன்னொரு தரம் வந்து பார்க்கச் சொன்னேன் என்று தெரிவித்துவிட்டுவா. ஹூம்; நம்மால் ஆனதையெல்லாம் செய்து பார்த்துவிடுவோம்.

GOVT ORIENTAL MANUSCRIPTS
RECEIVED
10 JAN
MADRAS-3

சங்கமாலை: அப்படியே தேவி! (போக யத்தனிக்கிறுள்.)

சங்க: சங்கமாலா, நில். நந்திதேவர் எங்கே இருக்கிறுர்.

சங்கமாலை: அடுத்த விடுதியிலேயே இருக்கிறுர், அம்மணி! வேண்டும்போது அழைக்கச் சொன்னுர்.

சங்க: அந்தோ பரிதாபம்! அவரைக் கண்டால் என் மனம் அடியோடு கலங்கிவிடுகிறது. கஷ்டம், கஷ்டம்! நீ வைத்தியரை அழைத்து வரும்போது அவரையும் கூட்டி வந்துவிடு. இவளுடைய நிலைமை விநாடிக்கு விநாடி கேவலமாகிக்கொண்டு வருகிறது.

சங்கமாலை: அப்படியே, தேவி!

[துரிதமாக வெளியே போகிறுள். வித்தியாதேவி மீண்டும் புலம்புகிறுள்.]

வித்தியா: ஐயோ! அம்மா! ஜலம்! ஜலம்! நா வறண்டு போகிறதே! நாதா! கொஞ்சம் ஜலம் கொடுக்க மாட்டீர்களா? அம்மா! ஐயோ! என்னவோ செய்கிறதே! அம்மா! அம்மா!

[மெல்ல விழிகளைத் திறக்கிறுள். சங்கமித்திரை கண்ணீருடன் அவளுடைய நெற்றியில் புரளும் கூந்தலை ஒதுக்குகிறுள்.]

சங்க: அம்மா! இந்தா ஜலம்; கொஞ்சம் அருந்துகிறுயா?

[வித்தியாதேவி ஆவலுடன் சங்கமித்திரை தனது வாயில் விடும் ஜலத்தை அருந்துகிறுள். கண்களை மூடுகிறுள்.]

சங்க: வித்தியா! இப்போது எப்படி இருக்கிறது? என்னைப் பார். நான் யார் என்பது தெரிகிறதா?

[அன்புடன் அவளைத் தடவுகிறாள்]

வித்தியா: (விழிகளைத் திறந்து) ஆ! இது யார் குரல்?

[இளவரசியை நோக்குகிறாள்.]

ஆ! இளவரசி! சங்கமித்திரை!

[அவள் முகம் ஆனந்தத்தினால் மலர்கிறது. கைகளை நீட்டுகிறாள். சங்கமித்திரை கண்ணீருடன் அவளை அணைத்துக்கொள்கிறாள்.]

சங்க: வித்தியா! என் தோழி.

[இருவரும் விம்மி விம்மி அழுகிறார்கள்.]

வித்தியா: சங்கமித்திரா! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நான் எப்படி உன்னிடம் வந்தேன்? என்னுடைய சிசு எங்கே?

[இளவரசி மௌனமாக இருக்கிறாள்.]

வித்தியா: ஆ! சிசு மரித்துவிட்டதல்லவா? ஆம், அது ஒரு விதத்தில் நல்லதுதான். அன்பும் அருளும் அறவே அற்றுப்போன இந்தப் பாழுலகில் உயிருடன் இருந்து அவ்லற்படுவதைக் காட்டிலும் அச் சிசு மரித்ததே நல்லது! சங்கமித்திரா! ஒரு வேண்டுகோள்! அதைமட்டும் நிறைவேற்றுவாயா?

சங்க: வித்தியா, என்ன வேண்டும் உனக்கு? உடனே தெரிவி.

வித்தியா: தந்தை! என் தந்தையைமட்டும் ஒரு முறை காண வேண்டும். அவரிடம் விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

சங்க: வித்தியா, இதோ வந்துவிடுவார் உன் தந்தை. சங்கமாலை அவரை அழைத்துவரப் போயிருக்கிருள்.

வித்தியா: சங்கமித்திரா! இங்கே வா, என் சமீபத்தில். என் கண்கள் இருளுகின்றன. ஆ! அது யார்? ஆ! நாதா! நாதா! வந்துவிட்டீர்களா? சங்கமித்திரா! அது என்ன சப்தம்? பேரிகை முழக்கம் கேட்கிறதே! நாதா! நாதா! நானும் வருகிறேன்; ஆ! ஜலம்! நாதா! சங்கமித்திரா!

(இறக்கிருள்.)

சங்க: (முகத்தை மூடிக்கொண்டு) வித்தியா! வித்தியா! (அழுகிருள்.)

[சங்கமாலை, வைத்தியர், நந்திதேவர் மூவரும் துரிதமாக உள்ளே வருகிருர்கள்.]

நந்திதேவர்: ஐயோ! வித்தியா, வித்தியா, என் கண்மணி!

[அவள் உடலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கதறுகிருர். சங்கமித்திரை, சங்கமாலை இருவரும் விம்மி விம்மி அழுகிருர்கள். வைத்தியர் வித்தியாவின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு மௌனமாக வெளியே செல்கிருர்.]

காட்சி 7

பகல்

[சக்கரவர்த்தியின் விடுதி. அசோகவர்த்தனர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் எதிரே தாழ்ந்த பீடம் ஒன்றில் உட்கார்ந்திருக்கிறாள் சங்கமித்திரை. பணிமகன் ஒருவன் உள்ளே வந்து தீபங்களை ஏற்றிவிட்டு வணங்கி வெளியே செல்லுகிறான். சங்கமித்திரை தலைகுனிந்திருந்தவள் மெல்லத் தலையைத் தூக்கி அவரை நோக்குகிறாள். இருவர் விழிகளிலும் நீர் மல்குகிறது.]

சங்க: தந்தையே! இன்று பகல் இலங்கை அரசனை உபகுப்தனிடமிருந்து வந்த தூதனை நான் இங்கே அனுப்பினேனே, அவன் வந்திருந்தானா;

சக்கர: ஆம், குழந்தாய், வந்திருந்தான்.

சங்க: அவனிடம் தாங்கள் என்ன பதில் சொல்லி அனுப்பினீர்கள்?

சக்கர: யோசித்துக் கூறுவதாகச் சொன்னேன். வேறு என்ன சொல்வது?

சங்க: தந்தையே, இதில் யோசனை என்ன இருக்கிறது? என்னையும் சகோதரனையும் அனுப்புவதாகக் கூறிவிட வேண்டியதுதானே!

சக்கர: குழந்தாய், மகேந்திரனை அனுப்ப எனக்குத் தடையில்லை. ஆயின் என் கண்மணி, கடல் கடந்த தேச

மாகிய இலங்கைக்கு உன்னை அனுப்ப என் மனம் துணிய வில்லையே! நான் என்ன செய்வேன்?

சங்க: தந்தையே. நெடு நாட்களாகவே, நான் இவ் வுலகத்தையும், இதன் சுகதுக்கங்களையும், அறவே வெறுத்து வந்திருக்கிறேன். அது தங்களுக்குத் தெரியும். வாழ்க்கைப் பந்தங்களாகிய இவ்வுலகின் ஆசாபாசங்களில் சிக்குண்டு, அவற்றினின்றும் விடுபடும் வகையறியாது தவித்து உழலும் ஜீவன்களுக்கு, ஞானவொளி மிகுந்த தமது அருள் மார்க்கத்தைக் காட்டியருளிய அந்தப் போதி நாதனை புத்ததேவனின் மார்க்கம் என்னைப் பெரிதும் ஆகர்ஷிக்கிறது. புத்தபகவானின் திருவடிகளை நம்பி, பௌத்தமதத்தின் பிக்ஷுணியாக வெளிப்போந்து, அம் மதத்தின் உண்மைக் கொள்கைகளையும் உயர்ந்த தத்து வங்களையும் வெளிப்படுத்தி மதப்பிரசாரம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே என் இருதயத்தில் வாசம் செய்கிறது. தந்தையே, தயங்காமல் அநுமதி அருள வேண்டும்.

கக்கர: (**தழுதழுத்த குரலில்**) குழந்தாய், நீ கூறு வதை எல்லாம் நான் ஒப்புக்கொள்கிறேன். நீ பௌத்த பிக்ஷுணியாவதில் எனக்குத் தடை ஒன்றும் இல்லை. ஆயின் என் கண்ணே, சங்கமித்திரா, கடல் கடந்த தேச மாகிய இலங்கைக்குப் பச்சிளம் பாலிகையாகிய உன்னை அனுப்ப என் மனம் துணியவில்லையே! குழந்தாய், நம் தேசத்திலேயே இருந்து மதப்பிரசாரம் செய்துகொள். இலங்கைக்கு மகேந்திரனை அனுப்புகிறேன்.

சங்க: (**தீர்மானத்துடன்**) தந்தையே! இதென்ன வீண் சபலம்? என்றுமே இந்த அரண்மனையையும், ஆடம்பர வாழ்க்கையையும் அடியோடு வெறுத்து வந்தது

என் மனம். கலிங்கநாட்டில் நடந்த போரின் கொடுமைகளையும், அதன் கொடுமைக்கு ஆளான பேதை வித்தியாதேவி இறந்து போனதையும் என் கண்களால் கண்ட பிறகு புத்ததேவரின் திருவடிகளையும் அப்பெருமானின் அருள் மார்க்கத்தையும் தவிர வேறு எதைப்பற்றியும் எண்ண என் மனம் இடம் கொடுக்கவில்லை. சீக்கிரம் இந்தப் பந்தங்களையெல்லாம் விட்டுச் சென்றுவிட வேண்டும் என்னும் எண்ணமே என் மனத்தில் மேலோங்கி நிற்கிறது. அவ்வெண்ணம் நிறைவேறினுலொழிய என் மனம் சாந்தி பெருது. தாங்கள் என்னைத் தடை செய்யாமல், என்னுடைய எண்ணம் நிறைவேற அநுமதி அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

[எழுந்து சக்கரவர்த்தியை வணங்குகிருள். சக்கரவர்த்தி அவளைத் தூக்கி எடுக்கிருர்.]

சக்கர: (கண்ணீருடன்) குழந்தாய், குழந்தாய்!

சங்க: தந்தையே!

சக்கர: குழந்தாய், சங்கமித்திரா! இன்றே என் கண்கள் திறந்தன. புறக்கண் இருந்தும் அந்தகனுகவே இருந்தேன் இவ்வளவு நாள்! குழந்தாய், ஆடம்பரமான இவ் வாழ்க்கையில் மயங்கி, அருளையும் அன்பையும் அடியோடு மறந்திருந்தேன். பச்சைப் பாலகியான உன்னுடைய உண்மை வார்த்தைகள் என் கண்களைத் திறந்துவிட்டன! சங்கமித்திரா, இன்றைத் தினத்திலிருந்து நான் ஓர் உண்மைப் பௌத்தன். மண் ஆசையையும், பொன் ஆசையையும், மற்ற ஆசைகளையும் அடியோடு ஒழித்தேன். சங்கமித்திரா! கலிங்கத்துப் போரிலிருந்து நான் திரும்பி வந்த அன்று நீ எனக்கு அறிவுறுத்

திக் கூறிய உயர் மொழிகள் இன்னமும் என் செவிகளில் ஒலிக்கின்றன. நான் செய்த கொடுமைகள் யாவும் பயங்கர ரூபத்துடன் இரவும் பகலும் என்னைப்பற்றி வதைத்துக் கொண்டிருக்கின்றன. வித்தியாதேவி இறந்த பிறகு அவை முன்னிலும் அதிக பயங்கரமாக என்னை வதைக்கலாயின. குழந்தாய், இன்றே நான் வெளிச்சம் கண்டேன். புத்த பகவானின் திருவடிகளில் அன்பு கொண்டேன். அந்தப் பெருமானின் அருள்மொழிகளில் ஆர்வம் கொண்டேன்.

சங்க: (ஆனந்தத்துடன்) தந்தையே, தந்தையே!

சக்கர: (ஆவேசத்துடன்) ஆமாம். குழந்தாய்! என்னைப் பௌத்தனாக்கிய பெருமை உன்னையே சாரும். வயதில் சிறியவளாயினும் அறிவினால் பெரியவள் நீ. உன்னுடைய பாதங்களில் நான் வணங்கினும் அது தகும். என்னுடைய குருவன்றோ நீ?

[குனித்து அவளை வணங்க யத்தனிக்கிறார். சங்கமித்திரை பரபரப்புடன் எழுந்து அவரைத் தடுக்கிறாள்.]

சங்க: தந்தையே, என்ன காரியம் செய்கிறீர்கள்? நான் தங்கள் மகள் அல்லவா? தங்கள் குழந்தை அல்லவா?

சக்கர: (கண்ணீருடன்) குழந்தாய், நான் செய்திருக்கும் பாவங்கள் மகத்தானவை. அவற்றுக்கு மன்னிப்புக் கிடைக்குமா?

[விம்மி விம்மி அழுகிறார்.]

சங்க: தந்தையே, வருந்த வேண்டாம். பாவங்களை உணர்ந்து வருந்தி, அவற்றுக்காக மனமாரப் பச்சாத்தாபம் அடைந்தோருக்கு மன்னிப்பு உண்டு.

[வெளியே மணியோசை கேட்கிறது.]

சங்க: தந்தையே, நேரம் ஆகிவிட்டது. விடை கொடுங்கள். இன்று சம்பா நதிக்கரையில் இருக்கும் அநாதாலயத்தில் ஏழைகளுக்கு அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கே நான் செல்ல வேண்டும்.

சக்கர: குழந்தாய், போய் வா.

[சங்கமித்திரை போகிறாள்.
சக்கரவர்த்தி சாளரத்தில் போய் அமருகிறார்.]

T. 3132

காட்சி 8

பகல்

[சம்பா நதிக்கரையில் இருக்கும் பௌத்தமடத்தின் முன்பிருக்கும் திறந்த மைதானம். ஒரு புறம் பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும்நின்றுகொண்டிருக்கிறார்கள். ஏழைகள் உண்டுவருகிறார்கள். கணக்கற்ற ஏழைகளுக்கு அன்னம் இடப்படுகிறது. ஒரு புறமாகச் சங்கமித்திரை, மகேந்திரன், நந்திதேவர், சங்கமாலை முதலியோர் நிற்கிறார்கள். இளவரசியின் அருகில், பொன்னும் வெள்ளியும், மணி அணிகளும், பட்டுப்பட்டாடைகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன. பசியாறி வரும் ஏழைகளுக்கு அவற்றை வாரி வாரி வழங்குகிறாள் இளவரசி. பெற்றுச் செல்லும் ஏழைகளின் வாழ்த்தொலியும் ஆசிமொழிகளும் அண்டமுகட்டை எட்டுகின்றன. எங்கும் ஒரே சப்தம்.]

முதல் ஏழை: தேவி, தாங்கள் தர்மத்தின் அவதாரம்; தர்ம தேவதை; கடவுள் உங்களுக்குப் பரிபூரணமான ஆயுளைப் போட வேண்டும்.

[வஸ்திரம் பெற்றுச் செல்லுகிறார்கள்.]

இரண்டாம் ஏழை: அம்மணி, எங்கள் வயிறு குளிர்ந்தது. போர்க்கொடுமையால் துயருற்று, உணவற்று வருந்திய எங்களுக்கு, அகம் குளிர அன்னமிட்ட அம்மணி, உங்கள் ஆயுள் நீடிக்க வேண்டும்.

[பொற்காசுகள் பெற்றுச் செல்லுகிறான்.
கிழவி ஒருத்தி கோலூன்றி வருகிறாள்.]

கிழவி: குழந்தாய், தர்மதேவி நீ! உன்னுடைய தர்மம் என்றும் தழைத்து ஓங்கட்டும்! உனக்கு என்றும் இடுக்கண் வராமல் ஈசன் காக்கட்டும். எங்கள் வயிறு குளிர்ந்ததைப்போல் உன் மனமும் குளிரட்டும்.

[ஆசிர்வதிக்கிறாள். சங்கமித்திரை கண்ணீருடன் அவளுக்கு வஸ்திரம் அளிக்கிறாள். பெற்றுச் செல்கிறாள் கிழவி. ஒரு நோயாளியை இரு சேவகர்கள் தூக்கி வருகிறார்கள். இளவரசியைக் கையெடுத்துக் கும்பிடுகிறான் அவன்.]

நோயாளி: தேவி, அன்னத்தைக் கண்களால் கண்டு எவ்வளவோ காலம் ஆயிற்று. இன்றே பசியாற உண்டேன்: என் நோயும் தணிந்தது. அநாதைகளான எங்களுக்கு அன்னம் இட்டு ஆதரித்த அம்மணி தாங்கள். கடவுள் தங்களுக்குத் தீர்க்காயுளைப் போட வேண்டும்! தர்மம் என்றும் தலைகாக்கும்.

[கும்பிடுகிறான். இளவரசி வஸ்திரம் அளிக்கிறாள். சேவகர்கள் அவனைத் தூக்கிச் செல்கிறார்கள். மேலும் மேலும் ஏழைகள் வந்துகொண்டே இருக்கிறார்கள். சங்கமித்திரை தானம் அளித்துக்கொண்டே இருக்கிறாள். பகல் போய் இரவும் வருகிறது. இளவரசியின் அருகிலிருக்கும் தானப்பொருள்கள் யாவும் தீர்ந்துவிட்டன. பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் நோக்கிக்கொள்கிறார்கள். சங்கமாலை கைகளைப் பிசைகிறாள்.]

சங்கமாலை: தேவி, தேவி!

சங்கமித்திரை: [திடுக்கிட்டு அவளை நோக்குகிறாள்.] சங்கமாலா, என்ன விசேஷம்?

சங்கமாலை: [மெதுவாக] தேவி, பொருள்கள் யாவும் தீர்ந்துவிட்டன. இனிமேல் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை.

[இளவரசி நாலுபுறமும் நோக்குகிறாள். தன்னைத்தானே குனிந்து நோக்கிக்கொள்கிறாள். அவள் முகத்தில் புன்னகை தோன்றுகிறது. தன் கழுத்தில் இருக்கும் முத்தாரங்களையும், கைகளில் இருக்கும் கடகங்களையும் துரிதமாகக் கழற்றுகிறாள். அவைகளைத் தானமாகக் கொடுக்கிறாள். யாவரும் பிரமித்து நிற்கிறார்கள். மகேந்திரன் புன்னகையுடன் அவள் அருகில் வருகிறான்.]

மகேந்திரன்: சங்கமித்திரா, ஏழைகள் யாவருக்கும் திருப்தியாக அன்னம் இட்டு, வஸ்திரங்களும் கொடுத்தாயிற்று. பொழுது சென்று நெடுநேரம் ஆயிற்று. வானவெளியில் நிறைமதியும் உதயமாய்விட்டான். வா, போவோம்.

சங்க: அண்ணா, பசியாறி உண்டு செல்லும் இவர்கள் முகத்திலேதான் எனன திருப்தியும் உவகையும் விளங்குகின்றன! அதைப் பார்த்ததில் நம் மனமும் கண்களும் குளிர்ந்துவிட்டன; அல்லவா?

மகேந்திரன்: எல்லாம் தேவனது அருள். தர்மத்தைக் கடைப்பிடித்து நடக்க வேண்டியது நம் கடமை. அக்கடமையினின்றும் வழுவாது அறமார்க்கத்திலேயே ஒழுகிவரப் புத்ததேவன் ஒளிகாட்ட வேண்டும். வா, போவோம்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி 9

காலை

[அரண்மனையைச் சேர்ந்த தடாகக்கரை. சங்கமித்திரை ஸ்நானம் செய்து தூய வஸ்திரத்துடன் புஷ்பம் கொய்துகொண் டிருக்கிருள். சக்கரவர்த்தி வருகிருர்.]

சங்கமித்திரை: தந்தையே, நமஸ்கரிக்கிறேன்.

[வணங்குகிருள்.]

சக்கரவர்த்தி: குழந்தாய், புத்தப் பெருமான் தனிக் கருணை உன்னைக் காக்கட்டும்.

[அங்கிருக்கும் பளிங்காசனத்தில் அமர்கிருர். சங்கமித்திரை எதிரே நிற்கிருள்.]

குழந்தாய், நேற்று நானும் ஞானகோஷரின் உபந்நியாசத்துக்கு வந்தேன். ஆயின் அதற்கு முன்னல் அநாதாலயத்தில் முழுமதிதோறும் நீ வழங்கிவரும் தான தர்மங்களைக் குறித்துக் கேள்விப்பட்டமையால் முதலில் அங்கே வந்தேன்.

[சங்கமித்திரை மௌனமாக நிற்கிருள்.]

குழந்தாய், அங்கே நான் கண்ட காட்சி எனக்கு அளவிலாப் பெருமையையும் ஆனந்தத்தையும் கொடுத்தது. மாசற்ற தர்மதேவதையான உன்னைப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம்! சங்கமித்திரா, அந்தப் பாக்கியத்தின் பெருமதிப்பை இதுவரையிலும் உணராமல் போனேனே! எத்தனை ஏழை எளியவர்கள் உன்னைத் தம் அகம் குளிர

வாழ்த்திச் சென்றனர்? அந்த ஆனந்தத்துக்கு எது ஈடாகும்? அகம்பாவம் பிடித்துப்போய், அளவற்ற ஆசாபாசங்களில் உழன்ற எனக்குப் பச்சைப் பாலகியான உன்னுடைய மனம் அடைந்திருக்கும் பரிபக்குவம் அளவற்ற ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. என் கண்ணே, சங்கமித்திரை, உன்னைப் பெற்ற தந்தை என்பதைத் தவிர எனக்கு வேறு மதிப்பு இல்லை. குழந்தாய், நீதான் வழி காட்டிய ஞானதீபம். என்னுடைய இறுமாப்பை ஒழித்து, இன்பம் அளிக்கும் அருள் மார்க்கத்தை எனக்கு விளக்கிக் காட்டிய அருள் விளக்கு. சங்கமித்திரா, குழந்தாய், குழந்தாய்!

[முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுகிறார். சங்கமித்திரை அவர் கரங்களைப் பற்றிக்கொள்கிறாள்.]

சங்க: வருந்த வேண்டாம். கடவுளின் கருணை அளவற்றது. அவர் தங்களை மன்னிப்பார். தம்முடைய பாவச் செயல்களுக்காக மனமார வருந்திப் பச்சாத்தாபம் அடைவோருக்கு நிச்சயமாக மன்னிப்பு உண்டு. அதில் தங்களுக்குக் கொஞ்சமும் ஐயம் வேண்டாம். ஆசைகளை அறவே ஒழித்து, சகல ஜீவன்களிடத்தும் தாரதம்மியமற்ற உண்மை அன்பு கொண்டு, அற மார்க்கத்தைக் கண்டுபிடித்து ஒழுகுதலே நமக்கு உற்ற தர்மம். அந்த அற மார்க்கத்திலேயே ஒழுகி, மன்னுயிரைத் தன்னுயிர்போல் காத்து, தனக்கெனக் கொந்தளித்து எழும் ஆசைகளை அடியோடு ஒழிப்பவனே உண்மைப் பௌத்தனாவான். ஆசை அற்றவனே யாவற்றையும் கடந்தவன். அவனுக்கு இவ்வுலகில் ஒரு துக்கமும் இல்லை. அந்த நிலையை அடையும் மார்க்கத்தில் செல்லுதலே நீதி.

ஆகவே, தந்தையே, தாங்கள் வருந்துவதற்கு ஒரு காரணமும் இல்லை. புத்ததேவன் தம்முடைய அகக்கண்ணைத் திறந்துவிட்டார். இனிமேல் அவ்வருள் மார்க்கம் தமக்கு மிகவும் எளிது.

சக்கர: குழந்தாய், நீ கூறுவன யாவும் உண்மையே. உண்மை அறநெறியை இப்போதே உணர்ந்தேன். குழந்தாய், சங்கமித்திரா, சங்கமித்திரா!

[பேச முடியாமல் நாத் தழுதழுக்கிறது. கண்ணீர் பெருகுகிறது.]

சங்க: தந்தையே, அடுத்த முழுப்பிறை அன்றே நான் இலங்கைக்குப் பிரயாணப்படுவதாகத் தீர்மானித்து விட்டேன். அதற்கு வேண்டிய உதவிகள் அனைத்துக்கும் ஏற்பாடு செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சக்கர: குழந்தாய், இவ்வளவு சீக்கிரமாகவா?

சக்கர: ஆம் தந்தையே! ஆலசியம் செய்வதால் லாபம் என்ன? மனத்தில் வீண் சஞ்சலம் உண்டாவதுதான் லாபமாகும். மேலும், ஞானகோஷபிக்ஷு எனக்காக அடுத்த பௌணர்மி தினம் வரையிலும்-நான் மிகவும் வேண்டிக்கொண்ட தன்பேரில்- இங்கே தங்க இசைந்திருக்கிறார். அவர் அடுத்த முழுமதியன்று இலங்கைக்குப் பிரயாணப் படுகிறார். அப்போதே நானும் செல்ல விரும்புகிறேன்.

சக்கர: குழந்தாய், உன்னுடைய இச்சை அதுவாயின் நான் ஒன்றும் தடை செய்ய விரும்பவில்லை. உன் விருப்பப்படியே செய்துகொள். ஆயின், குழந்தாய், உன்னைப் பெற்ற தந்தை என்ற காரணத்தால், நீ கடல்கடந்து செல்வதை எண்ணும்போது சிறிதே மனக்கலக்கம் உண்டாயிற்று. ஈசன் அருள் அதுவாயின் என்னால் ஆவது

ஒன்றும் இல்லை. நீ மேற்கொண்டு செல்லும் இப் பெருங் காரியத்தில் வெற்றி பெறுவாயாக.

[சங்கமாலை வருகிறாள். இருவருக்கும் வணங்குகிறாள்.]

சங்கமாலை: தேவி, நந்திதேவர் வந்திருக்கிறார். தங்களைக்காண விரும்புகிறார்.

சங்க: இங்கே அழைத்து வா.

சஙுககாலை: அப்படியே, தேவி!

[வணங்கிப் போகிறாள்,]

சக்கரவர்த்தி: குழந்தாய், நந்திதேவரும் உன்னுடன் இலங்கைக்கு வரப் போவதாகச் சொல்லிக்கொண் டிருக்கிறார் அல்லவா?

சங்க: ஆம், தந்தையே! அவரும் சங்கமாலையும் வருகிறார்கள். பாவம்! வித்தியாதேவியின் மரணத்துக்குப் பின்பு அவரைக் காணவே மிகப் பரிதாபமாக இருக்கிறது; இப்போதுகூட, அவளுடைய சமாதியில் தூவுவதற்குப் புஷ்பங்கள் வாங்கிப் போகவே வருகிறார். தினமும் காலையில் ஒருதடவை போய் அவள் உடலை அடக்கம் செய்திருக்கும் சமாதியைப் பார்த்து விட்டு அங்கேயே சிறிது நேரம் இருந்துவிட்டு வருவார்.

சக்கர: என்ன, என்ன?.......

[முகத்தை மூடிக்கொள்கிறார்.]

சங்க: தந்தையே, தந்தையே! என்னை மன்னிக்க வேண்டும். வித்தியாதேவியின் நினைவு தங்களுக்குத் துயரம் கொடுக்கும் என்று அறிந்திருந்தும் அவள் ஞாபகத்தைத் தங்களுக்கு உண்டாக்கிவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும், தந்தையே!

சக்கர: குழந்தாய், உன்னை நான் மன்னிக்க வேண்டிய அவசியமே இல்லை. நான் செய்த பாவங்களின் நினைவு என்னை விட்டு அகலாதிருத்தலே நல்லது. அப்போது தான் மனமாரப் பச்சாத்தாபம் அடைந்து அவற்றிற்காக ஈசனிடம் மன்னிப்புப் பெறுதல் சாத்தியமாகும்.

[நந்திதேவர் வருகிறார்.]

சங்க: ஸ்வாமி, வரவேண்டும்.

[நமஸ்கரிக்கிறார்.]

நந்தி: குழந்தாய், புத்ததேவன் அருள் உன்னைக் காக்கட்டும்! சக்கரவர்த்தியையும் இங்கே காணுமாறு நேரிட்டது என் பாக்கியம்.

[சக்கரவர்த்தியும் நந்திதேவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்கிறார்கள்.]

சங்க: ஸ்வாமி, புஷ்பங்கள் தயாராக இருக்கின்றன; எடுத்துப் போகிறீர்களா?

நந்தி: ஆம், குழந்தாய்! அவற்றை எடுத்துப் போகவே வந்தேன்.

[சங்கமித்திரை புஷ்பக் கூடையை எடுத்து அவரிடம் அளிக்கிறாள். நந்திதேவர் அதைப் பெற்றுக்கொள்கிறார்.]

நந்திதேவர்: சக்கரவர்த்தி! குழந்தாய்! நான் போய் வருகிறேன்.

[அங்கிருந்து மெல்லப் போகிறார்,]

சங்க: தந்தையே, நாமும் போவோமா? நான் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்ய வேண்டும்.

சக்கர: குழந்தாய், அப்படியே ஆகட்டும்.

[இருவரும் எழுந்து அரண்மனையை நோக்கிச் செல்கிறார்கள்.]

சக்கர: குழந்தாய், மகேந்திரனை நான் நேற்று முழுவதும் காணவே இல்லையே! அது எங்கே?

சங்க: பௌத்த நூல்கள் சிலவற்றை ஞானகோஷர் கொடுத்திருக்கிறார். அவற்றை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். மேலும் இலங்கையிலிருந்து வந்திருக்கும் பிக்ஷுக்கள் சிலர் அவருடன் தங்கியிருக்கிறார்கள். அதிலேயே சகோதாருக்குப் பொழுது போய்விடுகிறது. இன்று எப்படியும் தங்களைக் காண வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.

சக்கர: அப்படியா?

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி 10

இரவு

[சக்கரவர்த்தியின் விடுதி. புத்ததேவனின் சிலை பீடத்தின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. அருகே தீபங்கள் எரிகின்றன. தேவன் எதிரில் சக்கரவர்த்தி கண்களை மூடி அமர்ந்திருக்கிறார். இளவரசன் மகேந்திரன் வருகிறான். சற்று நிற்கிறான்,]

மகேந்திரன்: தந்தையே!

[சக்கரவர்த்தி கண் திறக்கிறார். அவர் முகம் மலர்கிறது.]

மகேந்: தந்தையே, நமஸ்கரிக்கிறேன்.

[வணங்குகிறான்.]

சக்கர: தேவன் அருள் கூடி வரட்டும், மகேந்திரா, வா, உட்கார்.

[இருவரும் ஆசனத்தில் அமர்கிறார்கள்.]

மகேந்: தந்தையே, நாளைத்தினம் நானும் சங்கமித்திரையும் ஞானகோஷருடன் இலங்கைக்குப் பிரயாணமாகிறோம. தங்களிடம் விடைபெற்றுச் செல்லவே வந்தேன்.

[சக்கரவர்த்தி சற்று நேரம் மௌனமாக இருக்கிறார். அவர் விழிகளில் நீர் மல்குகிறது. மகேந்திரன் அவர் கரங்களைப் பற்றிக்கொள்கிறான்.]

மகேந்: தந்தையே, தாங்கள் வருத்தப்படாமல் எங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

சக்கர: மகேந்திரா, சுகமே போய் வாருங்கள். சங்கமித்திரை பச்சைப் பாலிகை. அவளுக்கு ஓர் இடுக்கணும் நேராது பார்த்துக்கொள். புத்ததேவன் அருள் உங்களைக் காக்கட்டும்.

[மகேந்திரன் எழுந்து புத்ததேவன் சிலையை வலம் வந்து வணங்குகிறான்.]

மகேந்: தந்தையே, நான் போய்வருகிறேன்.

[வணங்கி வெளியே போகிறான். சக்கரவர்த்தி கண்ணீருடன் அவன் செல்லுவதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறார்.]

Acc. 16229

T. 3132

காட்சி 11

அந்திவேளை

[பாடலிபுரத்தின் துறைமுகம். மரக்கலம் ஒன்று தயாராகப் பாய்மரங்கள் விரிக்கப்பட்டு நிற்கிறது. மேலே நீல ஆகாயம். முழுமதியின் கோளம் கீழ் வானில் உதயமாகிறது. சம்பாநதியின் அலைகள் கரையில் மோதுகின்றன. கப்பலின் மேல்தட்டில் பிக்ஷுணிக் கோலம் தாங்கிய சங்கமித்திரை நிற்கிறாள். அவளுடைய கூந்தல் காற்றில் பறக்கிறது. அவளுடைய கரத்தில் மகாபோதி விருட்சத்தின் பசுங்கிளை ஒன்று அசைந்தாடுகிறது. அருகே பிக்ஷுக்கோலத்தில் மகேந்திரன் நிற்கிறான். நந்திதேவர், சங்கமாலை இருவரும் ஒருபுறமாக நிற்கிறார்கள். அசோகவர்த்தனர், மந்திரி, நந்தகுப்தர் இவர்கள் ஞானகோஷபிக்ஷுவிடம் பேசிக் கொண்டு நிற்கிறார்கள். கரையில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். எங்கும் ஒரே ஆரவாரம். ஜனங்களிடையே பெருத்த பரபரப்பு.]

முதல் நகரவாசி: இளவரசி போய்விட்டால் பிறகு நம் பாடலிபுரத்தில் ஏழைகளின் உற்ற நண்பர் யார்?

இரண்டாம் நகரவாசி: ஆம்; அத்துடன் இளவரசரும் பட்டத்தைத் துறந்து போகிறாரே! சக்கரவர்த்திக்கோ வயதாகிவிட்டது; அவருக்குப்பின் யார் பட்டத்துக்கு வரப்போகிறார்கள்?

மூன்றாம் நகரவாசி: ஏன்? இளைய மகாராணியின்

புத்திரர்கள் இல்லையா? அவர்களில் யாராவது பட்டத்தை அடைகிறார்கள்

இர. நகரவாசி: எப்படியானாலும், இளவரசி சங்கமித்திரையையும் இளவரசர் மகேந்திரகுப்தரையும்போல் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட மகா சாம்ராஜ்யத்தையே துறந்து, சகல சுகசௌக்கியங்களையும் வெறுத்து, பிக்ஷுக்கோலம் தாங்கிப் போகிறார்களே!

மு. நகரவாசி: அதென்னவோ வாஸ்தவந்தான். சக்கரவர்த்தியே எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம். இளைய மகாராணியும் சொன்னார்களாம். மந்திரி ராதாகுப்தரே இளவரசியை நேரில் கண்டு சொல்லிப் பார்த்தாராம். ஆனால் இளவரசி ஒன்றுக்கும் அசையவில்லையாம். அவ்வளவு உறுதியுடன் இருக்கும்போது நாம் என்ன செய்ய முடியும் என்று சக்கரவர்த்தியும் சம்மதப்பட்டுவிட்டாராம்.

மு. நகரவாசி: சம்மதித்திருக்கலாம். ஆயின், அவர் முகத்தைப் பார்த்தாலே அவருடைய மனக் கலக்கம் தெரிகிறது. சக்கரவர்த்தியாக இருந்தால் மட்டும் என்ன? இயற்கையாயுள்ள பாசம் விடுமா? தான் பெற்ற குழந்தைகளைக் கடல் கடந்த தேசமாகிய இலங்கைக்கு அனுப்ப யாருக்குத்தான் மனம் துணியும்?

இர. நகரவாசி: ஆ! அதோ சக்கரவர்த்தி இறங்கி வருகிறார். மரக்கலம் புறப்படப்போகிறதுபோல் இருக்கிறது.

காட்சி 12

பகல்

[யாவரும் நிற்கிறார்கள். சக்கரவர்த்தியின் கண்கள் கலங்குகின்றன. ராதாகுப்தர் தம்முடைய நீர் நிறைந்த விழிகளை மறுபுறம் திருப்பித் துடைத்துக்கொள்கிறார். மரக்கலம் அசைகிறது.]

சங்க: தந்தையே, நான் போய்வருகிறேன்.

மகேந்: தந்தையே, நான் போய்வருகிறேன்.

[இருவரும் வணங்குகிறார்கள்.]

சக்கர: குழந்தாய், சங்கமித்திரா! குழந்தாய், மகேந்திரா! இருவரும் சுகமே போய் வாருங்கள். நீங்கள் மேற்கொண்டு செல்லும் இப் பெருங் காரியத்தில் வெற்றிபெறுவீர்களாக. [தமது விழிகளைத் துடைத்துக்கொள்கிறார்.]

நந்திதேவர்: போய்வருகிறேன்.

சங்கமாலை: சக்கரவர்த்தி, போய்வருகிறோம்.

சக்கரவர்த்தி: சுகமே போய்வாருங்கள்.

எல்லோரும்: [ராதாகுப்தரை நோக்கி] போய் வருகிறோம்.

ராதாகுப்தர்: சுகமே போய்வாருங்சள்.

[மரக்கலம் அசைகிறது.]

சக்கர: ராதாகுப்தரே, நேரமாகிறது. நாம் இறங்குவோம்.

[எல்லோரையும் கண்ணீருடன் நோக்கிவிட்டு இறங்குகிறார். ராதாகுப்தரும் இறங்குகிறார். கரையை

அடைகிறார்கள். ஜனங்களிடையே நிச்சப்தம். சங்கமித்திரை மேல்தட்டில் இருந்தபடியே எல்லோரையும் நோக்கிக் கரம் கூப்புகிறாள்.]

ஜனங்கள்: தேவி, தேவி! போய்வாருங்கள். தங்கள் தர்மம் என்றும் தழைத்து ஓங்கட்டும். தேவன் அருள் தங்களைக் காக்கட்டும்.

[சங்கமித்திரை புத்ததேவன் ஆலயம் இருக்கும் திக்கு நோக்கி வணங்குகிறாள். மரக்கலம் மெல்ல மெல்லப் போகிறது. வானத்தில் மேகங்கள் கவிகின்றன. கப்பலின் மேல்தட்டில் யாவரும் அசைவற்று நிற்கிறார்கள்.]

ஜனங்கள்: இளவரசி சங்கமித்திரைக்கு ஜே! இளவரசர் மகேந்திரகுப்தருக்கு ஜே! தர்மதேவிக்கு ஜே! ஜே!! ஜே!!!

[கப்பல் கண்ணுக்கு மறைகிறது. சந்திரனும் மேகங்களினிடையே மறைகிறான்.]

முற்றும்

Acc. 16229

T. 3132

T. 3132

கலைமகள் வெளியீடுகள்

இதே ஆசிரியரின் வேறு நூல்கள்

கோழிப்பண்ணை .. ரூ. 2/-

நம் நாட்டுப் பொருளாதாரத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி கோழிப்பண்ணையை லாபகரமாக நடத்துவது எப்படி என்பதை விரிவாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறார். அநுபவபூர்வமான நூலாகையால் இதை ஆதாரமாகக்கொண்டு ஒரு பண்ணை நடத்தலாம். நடைமுறையில் வரும் பிரச்னைகளை எல்லாம் ஒன்று விடாமல் அலசித் தீர்த்திருப்பதால் கோழி வளர்ப்பவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டும்.

பழங்கள் - **அச்சில்**

பழங்களில் பலவற்றைப் பயிரிடுவது, ஒவ்வொன்றுக்கும் ஏற்ற காலம், எரு, நிலம் ஏற்படும் வியாதி, போக்கும் வழி, சேகரிப்பு, காப்பு, வியாபார முறை முதலிய பல தலைப்புகளில் பழத்தோட்டம் போட்டு லாபகரமாக நடத்த உபயோகப்படும் செய்திகளை எல்லாம் இதில் தெளிவாகக் காணலாம். விரைவில் வெளிவரும்.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்